ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ தங்கையை மூக்கும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தங்கையை மூக்கும் ॥

கங்கைக் கரையின் கண்டமென்னுந்திருப்பதி

‡தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
தடிந்த⋆ எம் தாசரதி போய்⋆
எங்கும் தன் புகழா இருந்தரசாண்ட⋆
எம் புருடோத்தமன் இருக்கை⋆
கங்கை கங்கை என்ற வாசகத்தாலே⋆
கடு வினை களைந்திடுகிற்கும்⋆
கங்கையின் கரைமேல் கை தொழ நின்ற⋆
கண்டம் என்னும் கடிநகரே (1)

சலம் பொதி உடம்பின் தழல் உமிழ் பேழ்வாய்ச்⋆
சந்திரன் வெங்கதிர் அஞ்ச⋆
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ண உருவின்⋆
மால் புருடோத்தமன் வாழ்வு⋆
நலம் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்⋆
நாரணன் பாதத் துழாயும்⋆
கலந்திழி புனலால் புகர் படு கங்கைக்⋆
கண்டம் என்னும் கடிநகரே (2)

அதிர் முகம் உடைய வலம்புரி குமிழ்த்தி⋆
அழல் உமிழ் ஆழி கொண்டெறிந்து⋆ அங்-
கெதிர் முக அசுரர் தலைகளை இடறும்⋆
எம் புருடோத்தமன் இருக்கை⋆
சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில்⋆
சங்கரன் சடையினில் தங்கி⋆
கதிர் முகமணி கொண்டிழி புனல் கங்கைக்⋆
கண்டம் என்னும் கடிநகரே (3)

www.prapatti.com

இமையவர் இறுமாந்திருந்தரசாள⋆
    ஏற்றுவந்தெதிர் பொரு சேனை⋆
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும்⋆
    நம் புருடோத்தமன் நகர் தான்⋆
இமவந்தம் தொடங்கி இருங்கடல் அளவும்⋆
    இரு கரை உலகிரைத்தாட⋆
கமை உடைப் பெருமைக் கங்கையின் கரைமேல்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (4)

உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும்⋆
    ஒண் சுடர் ஆழியும் சங்கும்⋆
மழுவொடு வாளும் படைக்கலம் உடைய⋆
    மால் புருடோத்தமன் வாழ்வு⋆
எழுமையும் கூடி ஈண்டிய பாவம்⋆
    இறைப் பொழுதளவினில் எல்லாம்⋆
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரைமேல்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (5)

தலைப்பெய்து குமுறிச் சலம் பொதி மேகம்⋆
    சலசல பொழிந்திடக் கண்டு⋆
மலைப் பெருங்குடையால் மறைத்தவன் மதுரை⋆
    மால் புருடோத்தமன் வாழ்வு⋆
அலைப்புடைத் திரைவாய் அருந்தவ முனிவர்⋆
    அவபிரதம் குடைந்தாட⋆
கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரைமேல்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (6)

விற் பிடித்திறுத்து வேழத்தை முறுக்கி⋆
    மேல் இருந்தவன் தலை சாடி⋆
மற் பொருதெழப் பாய்ந்தரையனை உதைத்த⋆
    மால் புருடோத்தமன் வாழ்வு⋆
அற்புதம் உடைய ஐராவத மதமும்⋆
    அவர் இளம் படியர் ஒண் சாந்தும்⋆

கற்பக மலரும் கலந்திழி கங்கைக்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (7)

திரை பொரு கடல் சூழ் திண்மதில் துவரை
    வேந்து⋆ தன் மைத்துனன் மார்க்காய்⋆
அரசினை அவிய அரசினை அருளும்⋆
    அரி புருடோத்தமன் அமர்வு⋆
நிரை நிரையாக நெடியன யூபம்⋆
    நிரந்தரம் ஒழுக்கு விட்டு⋆ இரண்டு
கரை புரை வேள்விப் புகை கமழ் கங்கைக்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (8)

‡வட திசை மதுரை சாளக்கிராமம்⋆
    வைகுந்தம் துவரை அயோத்தி⋆
இடம் உடை வதரி இடவகை உடைய⋆
    எம் புருடோத்தமன் இருக்கை⋆
தடவரை அதிரத் தரணி விண்டிடியத்⋆
    தலைப்பற்றிக் கரை மரம் சாடி⋆
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (9)

‡மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால்⋆
    மூன்றெழுத்தாக்கி⋆ மூன்றெழுத்தை
ஏன்று கொண்டிருப்பார்க்கிரக்கம் நன்குடைய⋆
    எம் புருடோத்தமன் இருக்கை⋆
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி⋆
    மூன்றினில் மூன்றுருவானான்⋆
கான் தடம் பொழில் சூழ் கங்கையின் கரைமேல்⋆
    கண்டம் என்னும் கடிநகரே (10)

‡பொங்கொலி கங்கைக் கரை மலி கண்டத்து⋆
    உறை புருடோத்தமன் அடிமேல்⋆
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க் கோன்⋆
    விட்டுசித்தன் விருப்புற்று⋆



www.prapatti.com

தங்கிய அன்பால் செய் தமிழ் மாலை⋆
    தங்கிய நா உடையார்க்கு⋆
கங்கையில் திருமால் கழலிணைக் கீழே⋆
    குளித்திருந்த கணக்காமே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com